# கண்காணிப்பாளர்களுக்கு பணி குறித்து விளக்கம்

மாளிகைக்காடு நிருபர்

'பவ்ரல்' தேர்தல் கண்காணிப்பு அமைப்பினால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு அம்பாறை மாவட்டத்தில் கண்காணிப்புப் பணிக்கு நியமிக்கப்பட்டுள்ளவர்களுக்கான கருத்தரங்கு கல்முனை சேனைக் குடியிருப்பில் பவ்ரலின் மாவட்ட இணைப்பாளர் கே.சக்திவேல் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அந்த அமைப்பின் திட்டமிடல் பணிப்பாளர் ஜெ.சிறீதரன் கலந்து கொண்டு கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாக விளக்கவுரையாற்றினார்.

இதன்போது எதிர்வரும் 8 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் பவ்ரல் அமைப்பின் கண்காணிப்பாளர்களாக பணியாற்ற இருக்கும் கண்காணிப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.